பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 28 சனிக்கிழமை 13.01.2024 அதிர்வு 166



## ரயில் மோதி ஒருவர் சாவு!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – தில்லையடி ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலில் மோதி நபர் ஒருவர் சாவடைந்துள்ளார் 04▸



# தமிழ் எம்.பிக்களையும் இணைத்துக்கொண்டு

# ரணில் தலைமையில் புதிய கூட்டணி மலரும்

## ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தேசிய அரசு;

## ஏப்ரல் மாதம் முக்கிய அறிவிப்பு வெளிவரும்

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தேசிய அரசு அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்காக எதிர்வரும் நாள்களில் பல கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. கலந்துரையாடல்களின்போது தேசிய அரசை அமைப்பதற்கான கூட்டணி உருவாக்கப்படவுள்ளது எனவும், ஏப்ரல் மாதத்தில் இது தொடர்பான திட்டம் வெளியிடப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது. 04▸

## வெற்றிலைக்கேணியில் கோர விபத்து; அபிவிருத்தி உத்தியோகத்தர் உயிரிழப்பு

### இராணுவ டிரக்டருடன் மோதி துண்டு துண்டாக உடைந்தது மோட்டார் சைக்கிள்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி – கோரியடிப் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரியும் வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான யேசுதாஸ் அன்ரன் பிலிப்பின் தாஸ் (பிலிப்பு)

## வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கும் மர்மப் பொருள்கள்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, உடுத்துறைப் பகுதியில் இன்றும் ஓர் மர்மப் பொருள் கரையொதுங்கியதால் அந்தப் பகுதியில் பரபரப்பு நிலவியது. 04▸



பொருளாதார நெருக்கடி காரணமாக

# ஆயிரத்து 700 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்!

**பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த ஆண்டு ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் மற்றும் 900 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

இந்த நடவடிக்கையானது இலங்கையின் மருத்துவத் துறையையும் பல்கலைக்கழங்களின் கல்வி நடவடிக்கையையும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

இலங்கையின் உயர் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், 2023 இல் சுமார் 900 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

இதனால், தற்போது விரிவுரையாளர்கள் மத்தியில் 50 சதவீத வெற்றிடம் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் ஒரு லட்சத்து 55 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர் தொகையைக் கருத்தில் கொண்டு, இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு உகந்த முறையில் இயங்குவதற்கு சுமார் 13 ஆயிரம் விரிவுரையாளர்கள் தேவைப்படுகின்றனர்.

எனினும், தற்போது 6 ஆயிரத்து 500 விரிவுரையாளர்கள் மாத்திரமே பல்கலைக்கழகங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் உயர் கல்வித் துறையானது பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது.

# கடுகண்ணாவையில் வாகன விபத்து காரில் பயணித்தோர் ஆஸ்பத்திரியில்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு – கண்டி பிரதான வீதியில் மாவனெல்லைக்கும் கடுகண்ணாவைக்கும் இடையில் கார் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் காரில் பயணம் செய்த நால்வரும் படு காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# வெள்ளத்துடன் வந்த முதலைகள்; மட்டக்களப்பில் மக்கள் அச்சத்தில்!

(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை வீழ்ச்சி கடந்த இரு தினங்களாக ஓய்ந்துள்ளது. எனினும் வீதிகளிலும், கிராமங்களிலும் வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் தேங்கியுள்ளது.

மழை ஓய்ந்துள்ள இந்த நிலையில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வெல்லாவெளி, கோவில் போரதீவு, பெரிய போரதீவு, உள்ளிட்ட பல பகுதிகளில் அண்மித்துள்ள குளங்களில் முதலைகள் நடமாடித் திரிகின்றன.

குளக்கரை ஓரங்களில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளையும் முதலைகள் வேட்டையாடி வருகின்றன. அந்தப் பகுதிக்குச் செல்லும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் அந்தப் பகுதி விவசாய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

அதிக மழைவீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளத்தில் மட்டக்களப்பு வாவியிலிருந்து கிராமங்களை அண்மித்துள்ள சிறிய குளங்களுக்கு இந்த முதலைகள் வந்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.




# மன்னார் ஆஸ்பத்திரி வளாகத்தில் டெங்கு அபாயம் சிரமானத்துக்கு அழைப்பு விடுத்துள்ள அரச அதிபர்!

## 18, 19, 20 ஆம் திகதிகளில் சிரமதானம்; அனைத்துத் தரப்புகளையும் உதவக் கோரிக்கை!!

(தலைமன்னார் நிருபர் வாஸ் கூஞ்ஞ)

நாம் டெங்கு நோயைத் தடுக்கும் நடவடிக்கைகளில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை தீவிரமாக செயல்படுத்தி வருகின்றோம். இந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்கள் தங்களுடன் டெங்கு நோயையும் கொண்டு செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டள்ளனர்.

மன்னார் பொது வைத்தியசாலை சுற்றாடல் மிக மோசமாக காணப்படுகிறது என்று பொது மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் வந்த வண்ணம் உள்ளன.

இந்த விடயம் தொடர்பில் கவம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என்று மன்னார் மாவட்ட அரசா அதிபர் கே.கனகவேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் மாவட்ட டெங்கு தடுப்பு மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அரசாங்க அதிபர் கே.கனகவேஸ்வரன் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வளாகம் 16 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது.

இந்த வளாகம் மிகவும் மோசமான முறையில் காணப்படுகிறது. இங்கு டெங்கு நோய் மிக எளிதாக தொற்றும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என்று பல புகார்கள் பொது மக்களிடமிருந்து எமக்கு கிடைக்கப் பெற்று வருகின்றன.

நான் இது தொடர்பாக இந்த வைத்தியசாலையை நேரடியாகச் சென்று பார்வையிட்டபோது அதன் உண்மையை உணர்ந்து கொண்டேன்.

நாம் டெங்கு நோய் பரவாதிருக்க பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து வரும் இதேவேளையில் அரச திணைக்களங்கள், அவர்களின் விடுதிகள், வைத்தியசாலைகள் போன்ற இடங்கள் கவனிக்கப்படாது இருப்பதும் உணரப்படுகின்றது.

ஆகவே டெங்கு நோய் தடுப்பு விடயத்தில் பொது மக்கள் மட்டுமல்ல யாராக இருந்தாலும் சுகாதார பகுதியினர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மன்னார் பொது வைத்திசாலையை பொறுத்தவரை இதன் வளாகம் உடன் துப்பரவு செய்ய வேண்டும்.

மதத் தளங்கள், பாதுகாப்பு தரப்பினர் மற்றும் பொது அமைப்புக்கள் போன்றோரை அணுகி தொடர்ச்சியாக மூன்று தினங்களுக்கு இங்கு சிரமதானம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்கமைய அடுத்த வாரம் வியாழன், வெள்ளி , சனி (18 , 19 , 20) ஆகிய மூன்று தினங்களுக்கு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

மன்னார் பொது வைத்தியசாலையில் சுத்திகரிப்பாளர்கள் பத்து பேர் மட்டுமே காணப்படுகின்றனர். அதை இருபதாக உயர்த்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதியுள்ளளேன்.–என்றார்.

# காத்தான்குடி இடைத்தங்கல் முகாமை நேரில் பார்வையிட்டார் அரச அதிபர்

(பழுவூரான்)

காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவில் உள்ள அல் பதுரிய்யா பாடசாலையில் தங்கியுள்ள மக்களை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே முரளிதரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அடை மழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 11 குடும்பங்களுக்குத் தேவையான படுக்கை விரிப்புகள் இதன் போது வழங்கப்பட்டன. இவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்படி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.



இந்தக் கள விஜயத்தின் போது காத்தான்குடி பிரதேச செயலர் யூ.உதய ஸ்ரீதர், மாவட்ட தகவல் அதிகாரி வி.ஜீவானந்தன், மாவட்ட அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் சுரேஸ்குமார், அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் சத்திய சஜந்தன், கிராம உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் விபத்தில் சிக்கிய இலங்கை ஐயப்ப பக்தர்கள் குழு

## 15 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குச் செல்ல இலங்கையில் இருந்து சென்னை சென்ற 15 பேர் பயணித்த வான் விபத்துக்குள்ளானதில் அவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி 15 பேரும் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வான் ஒன்றில் பயணித்துள்ளனர்.

சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா விஜயகோபாலபுரம் என்ற இடத்தில் வான் சென்றபோது திடீரென பிரேக் டவுன் ஆனது. இதையடுத்து வீதியோரம் வானை நிறுத்தி சாரதி பழுது பார்த்துக் கொண்டிருந்தபோது பின்னால் வந்த மற்றொரு வான் சாரதியும் வானை நிறுத்திவிட்டு வந்து சென்னை வான் சாரதிக்கு உதவி செய்து கொண்டிருந்தார்.

இந்நிலையில் சென்னையில் இருந்து கம்பத்தை நோக்கி வந்த தனியார் பஸ் முன்னால் நின்ற சென்னை வானில் பின்புறம் மோதியது. இதன்போது வானில் இருந்த இலங்கையைச் சேர்ந்த 15 பக்தர்கள், வான் சாரதி, பஸ் சாரதி உள்ளிட்ட 17 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்கள் உடனடியாக 108 அம்புலன்ஸ் மூலம் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து குறித்து பாடாலூர் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

காயமடைந்தவர்கள் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து பாடாலூர் பொலிஸார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வெள்ளத்தில் நீராடச் சென்ற இளைஞர் சடலமாக மீட்பு!

**(அஸ்ஹர் இப்றாஹீம்)**



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாசிவன் தீவு பிரதேசத்தில் நேற்று வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஓட்டமாவடி, கோழிக்கடை வீதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று நண்பர்களுடன் வெள்ள நீரில் நீச்சலாடியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்குடா சுழியோடிகள் சடலத்தை மீட்டனர். சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ரயில் மோதி...**

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இரவு கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணம் செய்த பயணிகள் ரயிலில் மோதியே மேற்படி நபர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட நபர் தொடர்பில் இதுவரை தகவல் எதுவும் தெரியவில்லை என்று புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிசாம் தெரிவித்தார்.

சடலம் புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது என்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி மேலும் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**வடமராட்சி கிழக்கில்...**

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் பல்வேறு வகையான மர்மப் பொருள்கள் கரையொதுங்கி வருகின்றமை தொடர் நிகழ்வாக இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையிலேயே இன்றும் ஓர் பொருள் கரையொதுங்கியுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கும் மர்மப் பொருள்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

**தமிழ். எம்.பிக்களையும்...**

வடக்கில் தமிழ்க் கட்சிகள், மலையக அரசியல் கட்சிகள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் மக்கள் சக்தியின் சில உறுப்பினர்களைக் கொண்டு இந்தக் கூட்டணியை அமைப்பதற்கான ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டணி உருவானதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக அறிவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் பிரதமர் பதவியைக் கூட்டணியின் பலமான தலைவர் ஒருவருக்கு வழங்குவது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

**வெற்றிலைக்கேணியில்...**

என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பணி முடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை நேற்று இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வெற்றிலைக்கேணி கரையோர வீதியால் மருதங்கேணி நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்கு உள்ளானவர் பயணித்த மோட்டார் சைக்கிள் துண்டு துண்டாக உடைந்துள்ளது.

இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனை பிரதேச மட்டத்தில் அனர்த்த முகாமைக் கூட்டம்

(பாறுக் ஷிஹான், எஸ்.அஷ்ரப்கான்)

தற்போதைய சூழ் நிலையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி தேவைகள் தொடர்பாக கல்முனை பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு மற்றும் வெள்ள அனர்த்த அவசரகால ஆயத்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கல்முனை பிரதேச செயலர் ஜே. லியாக்கத் அலி தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இந்த உயர் மட்டக் கூட்டத்தில் வெள்ள அனர்த்தம் கூடுதலாக ஏற்படுமாக இருந்தால் அதற்குரிய நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்வது பற்றியும், நிவாரண ஏற்பாடுகள் பற்றியும், தற்காலிக இடைத்தங்கள் முகாம்கள் அமைப்பது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.





இந்தக் கூட்டத்தில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப். ரகுமான், டாக்டர் ஏ.எல்.எம். பாரூக், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், சமூர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலீஹ், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எச். ஜனூபா, நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், மாநகர சபை அதிகாரிகள், கடற்படை அதிகாரி, சுகாதார துறை அதிகாரிகள், கல்வித்துறை அதிகாரிகள், கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை பிரதேச பள்ளிவாசல்களின் தலைவர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று ஆஸ்பத்திரிக்கு சத்திர சிகிச்சைக்கான இயந்திரம்



(சியாத்.எம். இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடத்தின் மிக நீண்டகாலத் தேவையாக இருந்த அல்ட்ராசோனிக் டிசெக்டர் உபகரணம் (Ultrasonic dissector) சுகாதார அமைச்சிடம் இருந்து கிடைத்துள்ளது.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் அதனை வைத்திய நிபுணர்களிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்தார்.

கமரா தொழில் நுட்பத்துடன் கூடிய சத்திர சிகிச்சைகளுக்கு (Laparo-scopic surgery) இந்த உபகரணம் மிகவும் அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9.5 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த உபகரணத்தைச் சுகாதார அமைச்சு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா!

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா இந்த முறையும் காலை, மாலை நிகழ்வுகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொங்கல் தினமாகிய திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் பணியகத்தில் பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலை ஞானசுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம்பெறும்.

வழமையாக பொங்கல் தினத்தன்று மாலையில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள் இந்த முறை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறும்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எதுவும் செய்வார் ரணில்

ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு விதமான யோசனையை அவிழ்த்து விடுவதில் வல்லவர் நமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவ்வப்போது அவர் பறக்க விடும் பலூன்கள் என்று அவற்றைப் பல தடவைகள் இப்பத்தியில் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

அவரின் இத்தகைய யோசனைகள், திட்டங்கள் அவ்வப்போது ஒன்றுக்கொன்று முரணாகக் கூட இருக்கும். அவை பற்றி எல்லாம் அலட்டிக் கொள்ளாமல் தம் பாட்டில் யோசனைகளை அவிழ்த்து விடுவார் ரணில். நாடும் மக்களும் அவற்றைப் பற்றி பேசிப் பேசியே - விவாதித்து வாதித்தே - காலத்தை ஒட்ட வேண்டியதுதான். காரியத்தில் எதுவும் நடக்காது.

அடுத்த ஜனாதிபதி தேர்தலை வரும் செப்டம்பர் 17க்கும் ஒக்டோபர் 17 க்கும் இடையில் நடத்தியாக வேண்டும்.

இதில் முடிவு செய்யும் அல்லது தலையிடும் அதிகாரம் ஏதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடையவே கிடையாது. அது முழுக்க முழுக்க சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவின் பொறுப்பும் கடப்பாடும் உடைய விடயமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுமானால் உள்ளூராட்சித் தேர்தலை நரித்தந்திர முறையில் தடுத்தமை போல, நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடுகளை தடுத்து குசும்புத்தனம் பண்ணலாம். ஆனால் ஜனாதிபதி தேர்தல் விடயத்தில் அப்படி அவர் நடப்பாரானால், உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தில் அப்படியான அரசின் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தி, நீதியை நிலை நாட்ட வக்கில்லாமல், காலம் இழுபட அனுமதித்துத் தடுமாறி நிற்கும் இலங்கை நீதித்துறை, அதுபோல ஜனாதிபதித் தேர்தல் விடயத்திலும் மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்று விசாரணை, நோட்டீஸ் பிறப்பித்தல், விசாரணைத் திகதி, எழுத்து மூலமாக சமர்ப்பணங்கள், எதிர்வாதங்கள் சமர்ப்பிப்பு என்று மேலும் இரண்டு, மூன்று வருட காலம் இழுபடுவதற்கு இடமளித்துப் பார்த்திருக் கலாம். ஆனால் மக்கள் பார்த்திருக்க மாட்டார்கள். 69 லட்சம் வாக்குகளை அளித்து, பெருவெற்றியை வழங்கி, ஆட்சி அதிகாரத்திற்குத் தாங்கள் கொண்டு வந்தவரையே அடுத்த இரண்டரை வருடங்களுக்குள் ஓட ஓட விரட்டிய மக்கள் இவர்கள்.

ஜனாதிபதி தேர்தல் ஒத்திவைப்புக்காக ஏதேனும் குசும்புத்தன அரசியல் நகர்த்தல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ள முயற்சிப்பாராயின் கோட்டாவின் கதி தான் அவருக்கு நேரும் என்பது உறுதி.

எனவே ஒக்டோபரில் ஜனாதிபதி தேர்தல் என்ற அரசமைப்புக் கடப்பாட்டை மீறாமல் நடக்கும் நோக்கிலேயே அவர் இப்போதைக்குச் செயற்படுவார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஜனவரியில் பொதுத் தேர்தல் என்று கடந்த வாரம் கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது கதையை மாற்றுகிறார். மாற்று யோசனை ஒன்றை உருட்டி விட்டிருக்கின்றார் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும், அதில் வென்றதும், தேசிய அரசு ஒன்றை அமைப்பேன் என்ற கருத்தை அவர் புதிதாக இப்போது அவிழ்த்து விட்டிருக்கின்றார் என்று உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குதிரை வண்டிக்கு முன்னால் கரட் கட்டும் தந்திரத்தை இப்படி ஆரம்பித்திருக்கின்றார் ரணில் என்றே கூற வேண்டும். தேசிய அரசு என்றால் அரசியலில் எதிரெதிர் துருவங்களில் இருக்கும் தரப்புகளையும் ஒன்று சேர்த்து அரசை ஒன்றை அமைக்கும் ஏற்பாடுதான். தேசிய அரசு என்றால் அதிகம் எம்.பிக்களுக்கு அமைச்சர் பதவிகளைத் தாராளமாக வழங்க முடியும். அதற்கு அரசமைப்பில் இடம் உண்டு.

ஜனாதிபதித் தேர்தலில் வென்றதும் தேசிய அரசு அமைப்பேன் என்று ஜனாதிபதி அறிவித்தால், அதற்குப் பின்னர் இருக்கின்ற இப்போதைய நாடாளுமன்றத்தின் சுமார் ஒரு வருட பதவிக்காலத்தில் அமைச்சர்களாக இருக்கலாம் என்று நப்பாசையில் எம்.பிக்கள் பலரும் தம்முடன் ஜனாதிபதித் தேர்தலில் அணி சேருவர் என்று ரணில் கனவு காண்கின்றார்; கணக்கிடுகின்றார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் இறங்குவது என்ற தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்ட ரணில் விக்கிரமசிங்க அந்தத் தேர்தலில் வெல்வதற்காக என்ன தந்திரமும் பண்ணுவார், எப்படியும் பண்ணுவார். அது அவருக்கு அத்துபடி. கை வந்த கலை.

# கொழும்பு காக்கைதீவு கரையோரப் பூங்கா முகாமைத்துவ சங்கத்தின் பொங்கல் விழா

கொழும்பு, காக்கைதீவு கரையோரப் பூங்கா முகாமைத்துவ சங்கம் நடத்தும் பொங்கல் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

15 ஆம் திகதி திங்கள் கிழமை மாலை 3.30 மணிக்கு காக்கைதீவு திறந்தவெளி அரங்கில் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

காக்கைதீவு கரையோர பூங்கா முகாமைத்துவச் சங்கம் பொங்கல் விழாவில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா, முல்லையில் உதவி!







யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 123 குடும்பங்களுக்கு 6 லட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட மாமூலை கிராமசேவையாளர் பிரிவில் 52 குடும்பங்களுக்கும் வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கோவில் புளியங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் 35 குடும்பங்களுக்கும், கணேசபுரம் கிராம சேவையாளர் பிரிவில் 36 குடும்பங்களுக்குமே உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

உலர் உணவு நிவாரணத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்கள், சமூக செயற்பாட்டாளர் இ. தயாபரன், கோவில் புளியங்குளம் கிராம சேவகர் சர்வேந்திரன், வெங்கல செட்டிக்குளம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சு.ஜெகதீஸ்வரன், வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர் ம.சுஜேந்திரன் ஆகியோர் வழங்கினர்.

# மண் பானைப் பொங்கல் பொதிகளை வழங்கிய தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்





தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தைப்பொங்கலை முன்னிட்டு நாவாந்துறையைச் சேர்ந்த எழுபது குடும்பங்களுக்குப் பொங்கல் பொதிகளை வழங்கியுள்ளது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் பொ .ஐங்கரநேசன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இந்தப் பொதிகள் வழங்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் அற்றார் அழி பசி தீர்த்தல் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற கருப்பொருளுடன் கொரோனாப் பெருந்தொற்று ஏற்பட்ட காலத்தில் இருந்து இடம் பெற்றுவரும் இத்திட்டத்தின் தொடர்ச்சியாகவே பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தைப்பொங்கல் இயற்கையைப் போற்றுகின்ற தமிழ்ப் பண்பாட்டுப் பெரு விழா என்பதையும், அலுமினியப் பானைகளில் சமைப்பதால் ஏற்படக் கூடிய பாதகங்களையும் கருத்தில் கொண்டு அனைவருக்கும் மண் பானைகளுடன் பொங்கல் பொருள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கான நிதி அனுசரணையைக் கனடாவில் உள்ள இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.



# கல்முனையில் அனர்த்த பகுதிகளில் மாநகர சபை துரித நடவடிக்கைகள்

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர பிரதேசங்களில் வெள்ள அனர்த்தங்களைக் கட்டுப் படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கை களை கல்முனை மாநகர சபை தீவி ரமாக முன்னெடுத்து வருகின்றது.

கடந்த பல தினங்களாக தொடர்ச்சி யாக பெய்த கனத்த மழை காரணமாக, சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகளும் திறக்கப்பட்டதால் கல்முனை மாநகர பிரதேசங்களிலும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் குளங்களை அண்டிய மற்றும் தாழ்நிலப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் அச்சமடைந்துள்ள னர்.



இந்த நிலையில் இந்தப் பகுதிகளில் வெள்ள அனர்த்தங்களால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி யின் வழிகாட்டலில், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜௌஸியின் நெறிப்படுத் தலில் பல்வேறு செயற்பாடுகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாநகர சபையால் முகத்துவாரங்கள் யாவும் திறக்கப்பட்டுள்ள நிலையில் வெள்ள நீரை வடிந்தோடச் செய்வதற் காக வடிகான்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

தோனா உட்பட பல்வேறு இடங்க ளிலும் முறிந்து வீழ்ந்துள்ள பாரிய மரங்களும் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகளில் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினரும் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர்.

அதேவேளை மாநகர ஆணையா ளர் ஏ.எல்.எம். அஸ்மி சம்மந்தப்பட்ட இடங்களுக்கு கண்காணிப்பு விஜ யங்களை மேற்கொண்டு களப்பணி களை துரிதப்படுத்தி வருகின்றார்.

வெள்ள அனர்த்த நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு கல்முனை மாநகர சபையின் பொறியியல் பிரிவு வேலைத் தொழிலாளர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் தடையின்றிச் சுத்திகரிப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் இடை விடாது மழை பெய்து, வெள்ளம் போட்டாலும் தடையன்றி தமது கட மையை முன்னெடுத்துச் செல்கின்ற னர் நகர சுத்திகரிப்புப் பணியாளர் கள்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிர தேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளால் தினசரி இந்தப் பகுதிகளில் சேரும் திண்மக் கழிவுகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வருகின் றன.

இரவு பகல் பாராது சேவையாற்றும் நகர சுத்திகரிப்பாளர்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது அம்பாறை மாவட்டத் தில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலமையி லும் திண்ம கழிவகற்றலில் நகர சுதி கரிப்பாளர்கள் ஈடுபட்டிருப்பது பாராட்டுக் குரிய விடயமாகும் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.






# ஆஸ்திரேலியா தமிழ்ப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பும் கௌரவிப்பும்








ஆஸ்திரேலியா மெல்பேனில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு தமிழ்க் கல்வி பயிற்றுவிப்பதில் முன்னணி வகிக்கும் நரே–வொரென் தமிழ்ப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா ஹேரால்ட் நாடாளுமன்ற உறுப்பினர் கசாண்ட்ரா பெர்னாண்டோ தலைமையில் கொண்டாடப்பட்டது.

ஒவ்வொரு வகுப்புகளிலும் பல பிரிவுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

விக்டோரியா மாநிலத்தால் நடத்தப்படும் தமிழ் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு உயர் விருதும், அதிக மதிப்பெண்ணைப் பெற்ற மாணவி ஸ்ருத்திகா உருத்திரகுமாருக்கு 500 டொலர் பணப் பரிசும் வழங்கப்பட்டது.

பரிசளிப்பு விழாவின் இறுதியில், ஆஸ்திரேலியா மண்ணில் தமிழ் சமூகத்தின் கலை, கலாச்சார, சமய வளர்ச்சிக்கும், தமிழ் தேசியத்துக்கும், தமிழ்க் கல்வி, ஊடகத்துறையின் வளர்ச்சிக்கும், தாயக உதவித் திட்டங்களுக்கும் அயராது உழைத்த சாண்டி சந்திரசேகரத்துக்கு நரே - வொரென் தமிழ்ப் பாடசாலை சமூகத்தால் சாதனைத் தமிழன் விருது வழங்கப்பட்டது.

இந்த விருதை ஹோல்ட் நாடாளுமன்ற உறுப்பினர் கசாண்ட்ரா பெர்னாண்டோ வழங்கிக் கௌரவித்தார்.



# சம்மாந்துறை பிரதேச மக்களை பார்வையிட்டார் பிரதேச செயலர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை பிரதேசத்தில் இரண்டு இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப் பட்டு மக்கள் பாதுகாப்பான முறை யில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பிரதேசத்தில் ஏற் பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரண மாக மக்களின் குடியிருப்பு நிலங்க ளுக்குள் நீர் உட்புகுந்துள்ளது.

அதை தொடர்ந்து சம்மாந்துறை பிரதேச செயலக அனர்த்த முகா மைத்துவ குழுவின் ஒத்துழைப்போடு, பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள னர்.

மல்கம்பிட்டி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள நெய்னாகாட்டு கிரா மத்தைச் சேர்ந்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 77 பேர் சம்மாந்துறை தாறுஸ்ஸ லாம் மகா வித்தியாலத்தில் தங்க வைக் கப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவுல் உள்ள மல்வத்தை பிரதேசத் தில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்த தில் பாதிக்கப்பட்ட மக்கள் சம்மாந்துறை மல்வத்தை விபுலானந்த மகா வித்தி யாலத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 90குடும்பங்களைச் சேர்ந்த 292 பேர் இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான உணவு மற்றும் ஏனைய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பிரதேச செயலர் எஸ். எல்.எம் ஹனிபா பாடசாலையில் அமைக் கப்பட்டுள்ள முகாம்களுக்கு நேரடியா கச் சென்று பார்வையிட்டார். மக்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு மக்க ளுக்குரிய ஆலோசனைகளும் வழங்கி னார்.



# அம்பாறை மாவட்டத்தில் பெரும்போகம் நாசம்!

## விவசாயிகள் கவலை தெரிவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை, இறக்காமம், அக்கரைப்பற்று, பொத்துவில், சாகாமம், திருக்கோ வில், அட்டாளைச்சேனை, ஒலுவில், நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, சாய்ந்தமருது மற்றும் கல்முனை பிரதேசங்களில் பெரும்போகம் செய்யப்பட்ட பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் குடலை பரு வத்தில் வெள்ளத்தில் மூழ்கியுள் ளன.

இந்த நிலையில் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காது என்றும் பாரிய நஷ்டத்தை எதிர்கொள்ள வேண் டிய நிலைமை தோன்றியுள்ளது என வும் விவசாயிகள் கவலை தெரிவித் துள்ளனர்.

பிரதேச விவசாய விரிவாக்கல் அலுவலகங்களின் ஊடாக விவசாய அமைப்புகள் அம்பாறை மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் டீ.எம். எஸ்.பி. திசாநாயக்காவைச் சந்தித்து இது விடயமாக கலந்துரையாட வுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

# கந்தளாய் வான் கதவு திறப்பு; விவசாயிகள் பெரிதும் பாதிப்பு!

(ஹஸ்பர்)

திருகோணாமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்த அடைமழையால் கந்தளாய் குளத்தின் 10 வான் கதவுகளும் திறக்கப்பட்டன. இந்த நிலையில் பல்லாயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கிண்ணியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட, வன்னியனார்மடு, புளியடிக்குடா முதலான பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்களே இவ்வாறு நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இந்தப் பகுதியில் சுமார் 2000 இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் பெரும் போக வேளாண்மை செய்யப்பட்டது.

இவ்வாறு வேளாண்மை செய்யப்பட்ட நிலங்களே கந்தளாய் குளத்தின் வான் கதவு திறக்கப்பட்டதால் நீரில் மூழ்கி காணப்படுகின்றன.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் செய்கை பண்ணப்பட்ட வயல் இந்த முறையும் தங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

படிச்சல் வாய்க்கால் இன்மையே இந்த நிலைமை ஏற்படக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு
கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டு கழக
ஏற்பாட்டில் DAN TV யின்
அனுசரனையுடன்



வடமராட்சி கிழக்கில்
03வது மாபெரும்
பட்டத் திருவிழா
2024

காலம் : 16.01.2023 (செவ்வாய்கிழமை)
நேரம் : பிற்பகல் 2.00 மணி
இடம் : கட்டைக்காடு சென்மேரீஸ்
விளையாட்டுக் கழக மைதானம்

தங்களின் கற்பனைத்திறனுக்கு எம் மண்ணில் ஓர்
அங்கீகாரம் தமிழரின் பண்பாட்டு கலையை எம்முடன் சேர்ந்து
கொண்டாடி பணப்பரிசில்களையும் வெற்றி பெற்று
தைபொங்கலை கொண்டாடுங்கள்.



முதலாம் பரிசு 100,000/=
இரண்டாம் பரிசு 50,000/=
மூன்றாம் பரிசு 25,000/=



பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு
உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்
றஜனி : 077 843 5381 தயாபரன் : 077 152 9308
ஏற்பாட்டுக்குழு



# மழை கால மருத்துவம்!

- நடராஜன் ஹரன் -

எங்கும் மழைவெள்ளம். இந்த மழை காலத்தில்தான் அதிகமாக நோய்கள் நம்மை விரைவாக தாக்கும். மழைக் காலத்தில் முடிந்த வரை நாம் கவனமாக இருக்க வேண்டும்.

குளிர், மழைக் காலங்களில் எளிதில் பரவுவது வைரஸ் தொற்றுக் கிருமிகள்தான். கோடை காலத்தில் வருவதை விட, தடிமன், ப்ளூ காய்ச்சல் போன்றவை குளிர் காலத்தில் சட்டென்று தாக்கிவிடும். குளிர் காலங்களில் முடிந்தவரை வெது வெதுப்பான சூழ்நிலையில் இருப்பது அவசியம். ஒருவரால், அவரின் எதிர்ப்பு சக்தியைப் பொறுத்துக் குளிரை தாங்க முடியும். ஆனால், குளிரால் தொற்றும் தொற்றுக் கிருமியை சாதாரணமாக ஒதுக்க முடியாது. கோடை காலத்தை விட மழைக்காலம், குளிர் காலத்தில்தான் தொற்றுக் கிருமிகள் எளிதில் பரவும்.

சுத்த இல்லாத குடி தண்ணீர் மூலம் கொலரா, வாந்தி, வயிற்றோட்டம், ப்ளூ காய்ச்சல், மஞ்சள் காமாலை ஆகிய நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இது குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை எல்லோரையும் தாக்கும். ஆகையால் முடிந்தவரை நன்றாகக் கொதிக்க வைத்து ஆறிய நீரை மட்டுமே அனைவரும் குடிக்க வேண்டியது அவசியமாகும்.

குழந்தைகளுக்கு மழைக் காலத்தில் கதகதப்பான ஆடைகளை அணிவிக்க வேண்டும். ஊர் எங்கும் தேங்கி இருக்கும் நீர் சாக்கடை போல் மாறி விடுகின்றது. வேறு வழியின்றி வீட்டுக்கு வெளியில் அந்த சாக்கடை நீரில் நடந்து செல்கிறோம். இவ்வாறு இருக்கும் போது வைரஸ் கிருமிகள் எளிதில் பரவி நோய்களை ஏற்படுத்துகிறது. வெளியில் இருந்து வீட்டுக் உள்ளே வரும் முன்பு நன்றாக கால்களை அலசிவிட்டு



வீட்டுக்குள் செல்லவும். செருப்பு, சப்பாத்து ஆகியவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

கடுமையான மழையால் மழை நீர் வீட்டைச் சுற்றித் தேங்கியிருக்கும். அதில் உருவாகும் நுளம்புகள் மூலம் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா, மூளைக்காய்ச்சல், யானைக் கால் ஆகிய நோய்கள் வரலாம். முடிந்தவரை நுளம்பு வலைக்குள் படுக்கப் பழகவும். மாலை ஐந்து, ஆறு மணிக்குள் வீட்டு ஜன்னல் கதவுகளை அடைத்துவிடவும். இதனால் அதிகமான நுளம்பு வீட்டுக்குள் வராமல் தடுக்கலாம்.

காய்ச்சல், இருமல் ஏற்படும் போது மருத்துவரிடம் சென்று தகுந்த மருந்துகளை எடுத்து கொள்ளலாம். சரியாகிவிடும் என்று வீட்டிலேயே ஏதேனும் மாத்திரை போட்டுக் கொள்வதை தவிர்க்கவும். தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாள்கள் காய்ச்சல் நீடிக்கும் பட்சத்தில் ரத்தப் பரிசோதனை செய்து என்ன கிருமி தாக்கியுள்ளது என்பதைத் தெரிந்து கொண்டு, அதற்குத் தகுந்தபடி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

கூடுமானவரை பள்ளி, கல்லூரிகள், அலுவலகங்களுக்குச் செல்பவர்கள் வீட்டில் இருந்து கொதித்து ஆறிய தண்ணீரைக் கொண்டு சென்று குடித்தால் மழை கால நோயில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். வீட்டு கழிவறைகள் மற்றும் வெளியில் பயன்படுத்தும் கழிவறைகள் சுத்தமாக இருந்தால் மட்டுமே பயன்படுத்தவும்.

உணவு சாப்பிடும் முன்பு கட்டாயம் கைகழுவி விட்டு சாப்பிடுவது நல்லது. மழைக் காலத்தில் நாம் சாப்பிடும் உணவில், இனிப்பு அதிகம் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. இரவு தூங்குவதற்கு முன், பாலில் மஞ்சள் தூள், மிளகுத்தூள், பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிடுவது நல்லது. கண்டிப்பாக மழைக் காலத்தில் நம் உணவுப் பதார்த்தங்களில், மிளகு பொடியைச் சேர்த்துச் சமைத்துச் சாப்பிடுவது நல்லது. சிலருக்கு சளி, இருமல் இருந்தாலும், விட்டமின் 'சி' சத்து ஒத்துப் போகும். சிலருக்கு மழைக்காலம் வந்து விட்டாலே ஒத்துக் கொள்ளாது. எலுமிச்சம், ஆரஞ்சு ஜூஸ் சாப்பிட்டாலும் ஒன்றும் செய்யாது. ஆனால், ஒத்துக் கொள்ளாதவர்கள் கண்டிப்பாக

(13ஆம் பக்கம் பார்க்க)



# மழை கால மருத்துவம்!

12ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாப்பிடாமல் இருப்பது நல்லது.

நமது நாட்டில் மின்சாரம் மழை நேரங்களில் அதிகமாகவே தடைப்படும் ஆகையால் முன்னதாகவே டார்ச்சு லைட், செல்போனுக்கு ஜார்ஜ் செய்து வைப்பது நலம்.

மழை நேரத்தில் மாலை நேரத்தில் பொரித்த உணவுகளைச் சூடாகச் சாப்பிட ஆசையாக இருக்கும். ஆனால் எண்ணெய்யில் பொரித்த வடை, பஜ்ஜினு சாப்பிடாமல் ஆரோக்கியமான சுண்டல், சாலட் போன்று சாப்பிடலாம். சூடாகத் தேநீர் பருகலாம். எந்த வகை உணவாக இருந்தாலும் சூடாகச் சாப்பிடவும்.

### மழைக்காலப் பாதிப்பு

டெங்கு - உணவுப் பாதை நோய்கள், மலேரியா – சரும பாதிப்பு, வைரஸ் – சமிபாடு ஆகிய பிரச்சினைகள் ஏற்படும்.

இவைகளை தவிர்க்கப் பழங்களே என்றும் எந்த காலத்திலும் சிறந்த உணவு. உப்பு உணவுகள் உடலில் நீரைத் தங்கச் செய்யும், நோயைக் கூட்டும், எனவே அதனைத் தவிருங்கள். அதிக அரிசியைத் தவிர்த்து மூக்கடலை, பருப்பு வகைகளை எடுத்துக் கொள்ளுங்கள். சிவப்பு அரிசி, பழுப்பு அரிசி, ஓட்ஸ், பார்லி இவை சிறந்தது. பூண்டை உணவில் சேருங்கள். பாலுக்குப் பதிலாக தயிர் மற்றும் பாதாம் எடுத்துக் கொள்ளலாம். அதிக கனமுள்ள எண்ணெய்களான கடலை எண்ணெய், நல்ல எண்ணெய் இவற்றைக் குறைத்துக் கொள்ளுங்கள். புளி உபயோகத்தைக் குறைக்க வேண்டும். அதிக அசைவ உணவுகளைத் தவிர்க்க வேண்டும். பச்சை காய்கறிகளை விட வேக வைத்த காய்கள் இக் காலத்தில் சிறந்தது.

மழைக்கால நீர் சுகாதாரமின்றி இருக்க அநேக வாய்ப்புகள் உண்டு. மழையால் ஏற்படும் வயிற்றுப் போக்கு அதிக ஆபத்தில் கொண்டு சென்று விடலாம். நன்கு கொதித்தாறிய வடிகட்டிய நீரை பயன்படுத்துங்கள். வயிற்றுப் போக்கை அலட்சியமாகக் கவனிக்காது விட்டு விடாதீர்கள். தும்மும் பொழுதும், இருமும் பொழுதும் கைதுண்டு கொண்டு வாய், மூக்கினை மூடிக் கொள்வது மற்றவர்களுக்குக் கிருமி பரவாதிருக்க உதவவும். இந்த நல்ல பழக்கத்தை இன்றிலிருந்தே செயற்படுத்துங்கள்.

உங்கள் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் இந்த பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

லெப்டோஸ்பைரோஸிஸ் எனப்படும் கிருமிப் பாதிப்பும் சுகாதாரமற்ற நீராலேயே ஏற்படுகின்றது. மூளைக் காய்ச்சல், கல்லீரல் பாதிப்பு, சிறுநீரகப் பாதிப்பு என்று அனைத்துப் பாதிப்பையும் ஏற்படுத்தும்.

இருமல், நெஞ்சு வலி, எச்சிலில் ரத்தம் வரதல் போன்ற அறிகுறிகள் இருப்பின் உடனடி மருத்துவரை அணுகவும்.

அடிக்கடி முகத்தைத் தொட்டுக் கொண்டே இருந்தால் வைரஸ் கிருமிகள் வாய், கண், மூக்கு போன்ற அனைத்து வழிகளிலும் உடலினுள் சென்று விடும். எனவே அடிக்கடி முகத்தைத் தொடுவதைத் தவிர்க்கவும்.

கைகளைச் சோப் கொண்டு கழுவுவதே முதல் உடல் நல பாதுகாப்பு முறையாகக் கூறப்படுகின்றது. எனவே உணவு உண்ணும் முன்பாக ஒவ்வொரு முறையும் சோப் கொண்டு கை கழுவவும். அதே போன்று சமைக்கும் முன்பும் சவற்காரம் கொண்டு கை கழுவவும்.

### மழைக்காலக் கவனம்

தெரு ஓரங்களில் இருக்கும் கடைகளில் சாப்பிடுவது, வெளியூரில் இருக்கும் ஆண்களுக்கு அவசியம். உள்ளூரில் இருக்கும் பலருக்கு விருப்பம். ஆனால் தண்ணீரும், காய்கறிகளும் சுத்தமாக இருப்பது மழைக் காலத்தில் கடினம். வயிற்றுப் போக்கு, வாந்தி என்று கிருமிகளின் பாதிப்பால் அநேகர் பாதிக்கப்படுகின்றனர். கவனம் தேவை.

கண்டிப்பாக நுளம்பு மருந்துகளை உபயோகித்தே ஆக வேண்டும். மலேரியா தவிர்ப்பு முறைக்காக மருத்துவ ஆலோசனை பெறவும். நில வேம்பு நீர் குடிக்கவும்.

தண்ணீரில் நனைந்து நடப்பது சந்தோசம்தான். கணக்கற்ற சரும வியாதிகள் காலில் வந்து விடும். எனவே நோயை நடந்து வரவேற்காதீர்கள்.

குடை, மழைகோட் என்பக வாசலிலேயே இருக்கட்டும். குளிர்ந்த உணவுகள், பானகங்களை எடுத்துக் கொள்ளாதீர்கள். குழந்தைகளை மழையிலோ, மழை நீரிலோ விளையாட விடாதீர்கள். மழை நீரில் நடக்கும் பொழுது மின்சார கம்பிகள் அதனுள் இருக்கலாம் பிள்ளைகளை எச்சரியுங்கள்.

கால்களை எப்பொழுதும் ஈரமில்லாமல் உலர்வாய் துடைத்து வைத்திருங்கள்.

சளி, வராது தவிர்க்கவும். வந்தால் உடனடி மருந்து எடுக்கவும். இல்லையெனில் பலநாள் படுக்க வைத்துவிடும்.

ஏசி அறையினுள் நனைந்த முடி, நனைந்த உடல், ஈர உடை இவற்றுடன் செல்லாதீர்கள்.

ஆஸ்த்துமா, சர்க்கரை நோய் உடையவராயின் வீட்டில் ஈர சுவர்கள் இருந்தால் எளிதில் பூஞ்சை நோய்கள் தாக்கி விடும். அதிக கவனம் தேவை.

அதிக கொழுப்பு உணவு, உடனடி உணவு இவைகளைத் தவிருங்கள். வயிற்றில் எளிதில் கிருமிப் பாதிப்பு ஏற்படும். இந்தக் காலங்களில் அதாவது மழை நேரங்களில் அதிக ஜீரண கோளாறு ஏற்படும். கிருமிகள் அதிக வீரியம் கொண்டதாக இருக்கும்.

மழைக் காலங்களில் பழங்களைத் தவிர்ப்போர் அநேகர். கிடைக்கும் பழங்களைக் கண்டிப்பாய் உண்ண வேண்டும். இதனால் விட்டமின் சக்தியும், நோய் எதிர்ப்பு சக்தியும் கூடும். உலர் பழங்கள், கொட்டைகள் மிகவும் நல்லது. சூப் உட் கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள். அதில் பூண்டு, கிராம்பு இவைகளை சேர்ப்பது உடலுக்கு நன்மை பயக்கும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# மழை கால மருத்துவம்!

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

மழைக்காலம் என்றால் தண்ணீர் குடிப்பது குறைந்து விடும். சுத்தமான எட்டு க்ளாஸ் நீர் உடலுக்கு மிக அவசியம் என்பதை மறந்து விடாதீர்கள்.

மழைக் காலம் என்றால் காரசார உணவுகளும், மசாலா உணவுகளும், உப்பு கூடிய உணவுகளும் அனைவரையும் ஈர்க்கும். இரத்த கொதிப்பு உடையவர்கள் இவ்வகை உணவுகளைத் தவிர்க்க வேண்டும். அவை உயர் இ ரத்த அழுத்தத்தில் கொண்டு போய் விட்டுவிடும்.

வேப்பிலை, பாகற்காய் போன்ற கசப்பு உணவுகள் அலர்ஜி, சரும கிருமி பாதிப்பிலிருந்து உதவுவதாக கூறப்படுகின்றது. வேப்பிலை பொடியைச் சருமத்தில் தடவிக் குளிக்கலாம்.

தண்ணீரை வீட்டிலோ வீட்டை சுற்றியோ தேங்க விடாதீர்கள். அறைகளை அடைத்து மூடி வைக்காதீர்கள். அறைக்கு வெளிச்சமும் காற்றோட்டமும் அவசியமே.

வெதுவெதுப்பான நீரில் குழந்தைகளை குளிக்க வையுங்கள்.

### மழை காலத்துப் பாதுகாப்பு

அவசர நேரங்களில் மின் இணைப்பை விரைந்து துண்டிக்கும் வகையில் மின் கருவிகளின் சுவிச்சுகளது இருப்பிடம் அமைய வேண்டும்.

மின் சாதனங்கள் உபயோகத்தில் இல்லாத பட்சத்தில், சுவிச்சை நிறுத்தி வைக்கவும்.

மின்சார, தீ விபத்துக்களுக்குப் பொருத்தமான தீயணைப்பான்களை மட்டுமே மின் சாதனங்களில் தீ விபத்து ஏற்படும்போது பயன்படுத்தவேண்டும். உலர்ந்த மணல், கம்பளிப் போர்வை, உலர்ந்த ரசாயணப் பொடி அல்லது கரிய மில வாயு ஆகிய தீயணைப்பான்களைப் பயன்படுத்தவும். மின்சாரத்தால் ஏற்பட்ட தீயை தண்ணீர் கொண்டு அணைக்க முயற்சிக்க வேண்டாம்.

தீ விபத்து மின்சாரத்தால் ஏற்பட்டதெனில், உடனே மெயின் ஸ்விட்சை நிறுத்திவிட வேண்டும்.

எந்த மின் சர்க்யுட்டையும் அளவுக்கு மீறி பளு ஏற்றக் கூடாது. ஸ்விட்ச் மற்றும் பியூஸ் போன்றவைகளை மாற்றும் போது சரியான அதே அளவு திறன் கொண்டவைகளையே பொருத்தவேண்டும்.

இடி அல்லது மின்னலின்போது வெட்ட வெளியில் இருக்காதீர்கள். இடி அல்லது மின்னலின்போது உடனடியாகச் சிமெந்துக் கூரையிலான பெரிய கட்டடம், வீடு போன்ற பெரிய கட்டடங்களிலோ, உலோகத்தால் மேலே மூடப்பட்ட பேருந்து, கார், வான் போன்ற வாகனங்களிலோ தஞ்சமடையுங்கள். இடி அல்லது மின்னலின்போது குடிசை வீட்டிலோ, மரத்தின் அடியிலோ, பஸ் நிறுத்தும் நிழற்குடையின் கீழோ தஞ்சம் புகாதீர்கள்.

இடி அல்லது மின்னலின்போது தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை விட்டு அகலுங்கள். இடி அல்லது மின்னலின்போது தஞ்சம் அடைய அருகில் எதுவும் இல்லாதபட்சத்தில், மின் கம்பிகள், மின் கம்பங்கள், மரங்கள், உலோக கம்பி வேலி போன்றவை இல்லாத தாழ்வான பகுதிகளைத் தேர்ந்தெடுங்கள். இடி அல்லது மின்னலின்போது டி.வி., மிக்ஸி, கிரைண்டர், கணினி மற்றும் தொலைபேசி போன்றவற்றை பயன்படுத்தாதீர்கள். இடி அல்லது மின்னலின்போது திறந்த நிலையில் உள்ள ஜன்னல், கதவு போன்றவற்றின் அருகில் இருக்காதீர்கள்.

நீர் நிலைகள் மற்றும் ஆறுகளில் இருந்து மிகவும் தொலை தூரத்தில் சென்று குடியிருப்பதன் மூலம் வெள்ளத்தால் ஏற்படும் சேதங்களைத் தவிர்த்து விடலாம் என்றாலும் வாழ்க்கைக்குரிய ஆதாரத்தைப் பெறுவதற்கும் பயணம் மற்றும் வர்த்தக வசதிகளின் காரணமாகவும் பன்னெடுங் காலம் தொட்டே மக்கள் நீர்நிலைகளின் அருகிலேயே குடியிருந்து வருகிறார்கள்.



# 2016 இல் மாயமான விமானம்:
# சென்னைக் கரையை அண்டி பாகங்கள் கண்டுபிடிப்பு




கடந்த 2016ஆம் ஆண்டு தமிழக தலைநகர் சென்னையில் இருந்து அந்தமான் தலைநகரான போர்ட் பிளேரிற்கு சென்ற ஏ.என். -32 விமானம் வங்காள விரிகுடா மீது பறந்தபோது காணாமல் போனது.

அந்த விமானம் தாம்பரத்தில் இருந்து புறப்பட்ட 42 நிமிடங்களில் ரேடார் வரைபடமானது பார்வையில் இருந்து மறைந்தது.

இந்த நிலையில், தற்போது சென்னை கடற்கரையில் இருந்து சுமார் 310 கிலோ மீற்றர் தொலைவில் அதன் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என இந்திய விமானப்படை உறுதி செய்துள்ளது.

சென்னையில் இயங்கி வரும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் ஆழ்கடல் பகுதியில் 'சோனார்' தொழில்நுட்பம் மூலம் ஏ.என். -32 விமானத்தின் பாகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதனைப் படம் பிடித்து புவி அறிவியல் அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து விமானப்படைக்கு அந்த படங்கள் சென்றுள்ளன. அதன் பிறகு அது மாயமான ஏ.என்.-32 விமானத்தின் பாகங்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னை கடற்கரையில் இருந்து 140 கடல் நாட்டிக்கல் மைல் தொலைவில், கடலுக்கு அடியில் சுமார் 11,200 அடி ஆழத்தில் ஏ.என். -32 விமானத்தின் பாகங்கள் இருந்துள்ளன.

கடந்த 2016, ஜூலை 22ஆம் திகதி இந்த விமானம் மாயமானது. அதில் சுமார் 29 பேர் பயணம் செய்துள்ளனர். இதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர் என அப்போது தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு உலக நாடுகள் தங்களது இராணுவ பயன்பாட்டுக்காக இந்த விமானத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இதில் இந்தியாவும் அடங்கும். உக்ரைன் நாட்டை சேர்ந்த ஏவியன்ட் நிறுவனம் இதனை தயாரித்துள்ளது.

கடந்த 1980 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை இந்த விமானம் தயாரிக்கப்பட்டது எனவும் இரட்டை இயந்திரம் கொண்ட இந்த விமானம் மோசமான வானிலையிலும் இயங்கக் கூடிய தன்மை கொண்டது என தெரிவிக்கப்படுகின்றது.

# "எனக்கு உடல்நிலை சரியில்லையா?"
# சிரிப்பு தான் வந்தது என்கிறார் ஸ்டாலின்

"எனக்கு உடல்நலம் இல்லை. நான் உற்சாகமாக இல்லை என்ற செய்தியை படித்தபோது சிரிப்புதான் வந்தது. தமிழகமும், தமிழக மக்களும் மகிழ்ச்சியாக இருக்கும்போது, எனக்கு என்ன குறை."

– இவ்வாறு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

அயலகத் தமிழர் நலன், மறுவாழ்வு துறை சார்பில் சென்னையில் 2 நாட்கள் நடந்த அயலகத் தமிழர் தின விழா நேற்று நிறைவடைந்தது. இதில், தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, உள்ளிட்ட 8 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். 'எனது கிராமம்' என்ற முன்னோடி திட்டத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில்,



"எனக்கு உடல்நலம் இல்லை. நான் உற்சாகமாக இல்லை' என்ற செய்தியை படித்தபோது சிரிப்புதான் வந்தது. தமிழகமும், தமிழக மக்களும் மகிழ்ச்சியாக இருக்கும்போது, எனக்கு என்ன குறை. அதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும். எனக்கு எப்போதும் மக்களை பற்றிதான் நினைப்பே தவிர,என்னை பற்றி இருந்ததே இல்லை. எந்த சூழலிலும், மக்களோடு இருப்பவன் நான். சக்தியை மீறி உழைப்பவன். எனவே, இதுபோன்ற செய்திகளை ஒதுக்கி தள்ளிவிட்டு, உழைத்துக் கொண்டே இருப்பேன்.

வெளிநாடு வாழ் தமிழர்கள் தங்கள் முதலீடுகளை ஒப்பந்தம் மூலம் அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்ய ஏதுவான சூழலை இங்கு உருவாக்கி இருக்கிறோம்.

எங்கு வாழ்ந்தாலும் தாய் தமிழ கத்தை மறக்காதீர்கள்.

அடிக்கடி உங்கள் குழந்தைகளுடன் தமிழகம் வாருங்கள், கீழடி, பொருணை, ஆதிச்சநல்லூரை காட்டுங்கள். தமிழோடு இணைந்திருங்கள். எங்கு வாழ்ந்தாலும், தமிழக வளர்ச்சிக்கும், அரசுக்கும் துணையாக இருக்க வேண்டுகிறேன்." – என்றார்.

# அணு ஆயுதத்தை கையில் எடுப்போம்: ரஷ்யாவால் பகிரங்க மிரட்டல் விடுப்பு



உக்ரைன் மேற்கத்திய நாடுகளின் ஏவுகணைகளை பயன்படுத்தினால் அணு ஆயுதத்தை கையில் எடுப்போம் என்று ரஷ்யா மிரட்டல் விடுத்துள்ளது.

அமெரிக்கா வழங்கிய ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்த நினைக்கின்றது. இதை தற்காப்பாக கருத முடியாது.

ஆனால், போரில் அணு ஆயுதத்தை ரஷ்யா பயன்படுத்துவதற்கான அடிப்படை விஷயமாக இது அமையும்” என ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சில் டிமிட்ரி தலைவர் மெத்வதேவ் கூறியுள்ளார்.

உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவி, நிதி உதவி அளித்து வருவதால் ரஷ்யாவை எதிர்த்து உக்ரைன் சண்டையிட்டு வருகிறது.

எனவே அமெரிக்கா வழங்கிய ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தினால் அணு ஆயுதத்தை கையில் எடுப்போம் என்று ரஷ்யா மிரட்டல் விடுத்துள்ளது.

# சீனாவால் உரிமை கொண்டாடப்படும் தைவானில் இன்று ஜனாதிபதி தேர்தல்

சீனாவால் உரிமை கொண்டாடப்பட்டு வரும் தைவானில் இன்று ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது.

இந்நிலையில் அந்நாட்டின் , டி.பி.பி கட்சியின் லாய் சிங்-டே, கே.எம்.டி. கட்சியின் ஹூ யூ-இஹ், தைவான் மக்கள் கட்சியின் கோ வென்-ஜே ஆகியோர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தலில் வேட்பாளர்களிடையே மிகக் கடுமையான போட்டி நிலவுவதாகக் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இன்றைய ஜனாதிபதி தேர்தல் தைவானில் சீனாவின் எதிர்காலக் கட்டுப்பாட்டை முடிவு செய்யும் என்பதால் இதன் முடிவுகள் சர்வதேச தரப்பில் ஆர்வத்துடன் கவனிக்கப்பட்டு வருகிறது.




தைவானில் சீனாவின் அச்சுறுத்தல், தீவின் ஸ்திரத்தன்மை மற்றும் எதிர்காலக் கட்டுப்பாட்டை முடிவு செய்யும் ஜனாதிபதி தேர்தல் வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

தைவானில் ஜனாதிபதியை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்காக 8 ஆவது முறையாக நடைபெறும் இந்தத் தேர்தலில் வேட்பாளர்களிடையே மிகக் கடுமையான போட்டி நிலவுவதாகக் கூறப்படுகிறது.

# ஹவுதிகளின் முரண்பாடான செயற்பாடு தொடர்ந்தால் பதிலடி கொடுக்கப்படும் என்கிறார் ஜோ பைடன்!



ஹவுதி தரப்பினரின் முரண்பாடான செயற்பாடு தொடர்ந்தால் பதிலளிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

பென்சில்வேனியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், அங்கு ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் தங்களுடன் போரை விரும்பாத போதிலும் செங்கடலில் கப்பல் மீது தாக்குதல் நடத்திய ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஈரானின் ஆதரவில் உள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெடிமருந்து கிடங்குகள் உள்ளிட்ட வற்றை இலக்கு வைத்து ஹவுதி நிலைகள் மீது அமெரிக்கா மற்றும் பிரித்தானியா என்பன நேற்றைய தினம் தாக்குதல் நடத்தியிருந்தன.

இந்தநிலையில் ஆயிரக்கணக்கான யேமன் மக்கள் வீதிகளில் இறங்கி எதிர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதே டெங்கிலிருந்து எம்மைப் பாதுகாக்க வழி!

## பூநகரிப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவிப்பு

(த.சுபேசன்)

நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதும், நுளம்புக் கடியிலிருந்து எம்மைப் பாதுகாப்பதுமே டெங்கின் பிடியிலிருந்து விடுபடும் வழிமுறைகள் என்று பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

பூநகரி பிதேசத்திலுள்ள முக்கொம்பன் கிராமத்தில் அமைந்துள்ள கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்வை வழங்கிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

டெங்கு நோயுடைய ஒருவரைக் கடித்த டெங்கு நுளம்பு ஏறத்தாழ ஏழு நாள்களின் பின்னர் இன்னொருவரைக் கடிக்கும் போது டெங்குத் தொற்றை ஏற்படுத்தும்.

நுளம்புகள் தெளிந்த அசைவற்ற நீர்தேங்கும் கொள்கலன்களில் அதன் சுவரில் ஒட்டியிருக்கக் கூடியவாறு முட்டைகளை இடுகின்றன.

டெங்கு நோயுடையவரைக் கடித்த நுளம்பு இடும் முட்டைகளில் டெங்கு வைரஸ் காணப்படும்.

இந்த முட்டைகள் நீரின்றி 6 மாதம் முதல் ஒரு வருடம்வரை உயிர்ப்பாயிருந்து மீண்டும் நீர் கிடைக்கும் போது பொறித்து நுளம்புகளாகின்றன. அதேவேளையில் டெங்கு வைரஸையும் பரப்புகின்றன.

நுளம்பின் முட்டையிலிருந்து நிறைவுடலி நுளம்பு உருவாக குறைந்தது 8 நாள்கள் எடுக்கும்.

எனவே, தேவையற்ற நீர்தேங்கும் கொள்கலன்களை அவதானித்து அழிக்க வேண்டும்.



நீர் சேமித்துப் பயன்படுத்தும் தொட்டி மற்றும் பாத்திரங்களை வாரமொரு முறை உட்பகுதியை உரஞ்சிக் கழுவி நீரை மாற்ற வேண்டும்.

நீர் மாற்ற முடியாத நீர் நிலைகள், கொள்கலன்களினுள் (பெரிய நீர்த் தொட்டி / கிணறு) குடம்பிகளை உண்ணக்கடிய கப்பீஸ் வகை மீன்களை இடவேண்டும்.

மோட்டர் மூலம் மட்டும் நீரைப் பெறும் கிணறுகளை (மீன் வளர்க்காத) நுளம்பு வலைகள் போன்ற துணியால் மூடி நுளம்புகள் உட்புகாதபடி மாற்ற வேண்டும்.

கூரைப் பீலிகளை மழை காலங்களில் குப்பைகள் இல்லாதவாறு துப்புரவு செய்ய வேண்டும். நீர் வழிந்தோடக் கூடியவாறு வைத்திருத்தல் வேண்டும்.

சிரமதானங்களின் போது நீர்த் தேங்கக் கூடிய பிளாஸ்டிக், பொலுத்தீன், உலோக, கண்ணாடிக் கொள் கலன்கள், சிரட்டை மற்றும் இளநீர்க் கோம்பைகளை அகற்றுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

வீடுகளில் நீர்த் தாவரங்களை அழகுக்காக வளர்க்கும் பாத்திரங்கள், சாடிகளின் நீரை வாரமொருமுறை தவறாது மாற்ற வேண்டும்.

வளர்ப்புப் பறவைகள்,மிருகங்கள் நீரருந்தப் பயன்படுத்தும் பாத்திரங்களின் நீரை வாரமொருமுறை மாற்றுங்கள். மலசலகூடக் குழிகளில் காணப்படும் துவாரங்கள், வெடிப்புகளை சீமெந்துக்கலவையால் அடையுங்கள்.

மலக்கூடக் குழிகளில் பொருத்தப்படும் வளி வெளியேறும் குழாயின் மேல் பகுதியை நுளம்புவலையால் மூடிக் கட்டுங்கள்.

ஈடிஸ் நுளம்பு கடிக்கும் நேரங்கள் பொதுவாக சூரிய உதயத்திலிருந்து இரண்டு முதல் மூன்று மணித்தியாலங்கள் வரையும் சூரிய அஸ்தமனத்துக்கு முந்திய இரண்டு முதல் மூன்று மணித்தியாலங்கள் வரையுமாகும்.

இந்த நேரங்களில் உடலை மூடிய ஆடைகளை அணிவதும் வெளித் தெரியும் உடற்பாகங்களுக்கு புல் எண்ணை பூசுவதும் நுளம்புக் கடியில் இருந்து பாதுகாக்கும் வழிகளில் ஒன்றாகும்.

காய்ச்சல் அறிகுறிகள் ஏற்பட்டால் நுளம்பு வலையினுள் ஓய்வெடுங்கள். இரண்டு நாள்களுக்கு மேல் காய்சல் தொடர்ந்தால் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் குருதியைப் பரிசோதிக்கத் தவற வேண்டாம்.

காய்ச்சலைக் குறைக்க பரசிற்றமோல் மருந்தை மட்டும் உடல் நிறைக்கு ஏற்ற அளவில் 6 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை மட்டும் பயன்படுத்தவும். குறையாவிடின் இளஞ் சூட்டு நீரில் துணியொன்றை நனைத்து சற்றுப் பிழிந்த பின் உடலைத் துடைக்கலாம்.

வைத்தியரின் ஆலோசனைப்படி போதிய ஓய்வெடுப்பதோடு நீராகாரங்களையும் தவறாது உள்ளெடுங்கள்.

வைத்தியரின் ஆலோசனைப்படி வைத்தியசாலையில் தங்கி கண்காணிப்புடன் முகாமை செய்வது ஆபத்து நிலையைத் தவிர்க்க உதவும் என்பதை மறக்க வேண்டாம்.- என்றார்.

# அம்பாறை அரச அதிபர் குழுவினர் அட்டாளைச்சேனைக்கு கள விஜயம்!



(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய பகுதிகளை அம்பாறை மாவட்ட அரச அதிபர் குழுவினர் பார்வையிட்டனர்.

அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம். ஏ. சி. முஹம்மது றியாஸ், அம்பாறை மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எச். ஏ. அனீஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிர், உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர், அக்கரைப்பற்று பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அக்கீல் அஹமட் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.